Toilet Facilities in Madras Beach

*310 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal with the Government to provide toilet facilities in Madras beach; and

(b) if so, the details thereof?

சென்னை கடற்கரையில் கழிப்பிட வசதிகள்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை கடற்கரையில் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்; உண்டு;

(இ) கழிப்பிட வசதிகள் கட்டுவதற்கான விரிவான வரைபடம் சென்னை மாநகராட்சிப் பொறியாளரிடமிருந்து (Drainage Engineer) வரப்பெற்று, அது நிலப்பகுதி எழில்படுத்தும் குழுவிற்கு (Landscape Implementation Committee) அனுப்பப்பட்டிருக்கிறது. நிலப்பகுதி எழில்படுத்தும் குழு வினரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, I wish to tell the Hon. Minister that, right from the backwaters beside the Hotel Oceanic up to the New Observatory, the Madras Beach is a public toilet. In these circumstances, will the Government try to concentrate the toilet facilities at some place, instead of making the whole Beach a public toilet?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதை அரசு உணர்கிறது. அதற்குத்தான் விரைவிலேயே ஒரு ஏற்பாடு செய்யலாம் என்று கருதுகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, சென்னைக் கடற்கரையிலே கழிப்பிடங்கள் எத்தனை கட்டப்படுகின்றன? அதற்கு ஆகும் செலவு என்ன? நிரந்தரமான கழிப்பிடங்களைக் கட்டி அந்த இடங்களை அசிங்கப்படுத்துவதை விட, மாலை நேரங்களில் வந்து இரவோடு கழிந்துவிடுகின்ற சுற்றுக் கழிப் பிடங்கள் (மூவிங் லெட்ரின்ஸ்) ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நகர்கின்ற கழிப் பிடங்கள் கட்டுவதற்கு வழி என்னவென்று தெரியாது. நமது என்ஜினியர்கள் அதை இனிமேல்தான் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether there is any proposal to introduce slot-machines for latrines as is done in foreign countries? One has to put 5 paise or 10 paise in these machines for the use of the latrines and permanent persons may be allocated to see that the latrines are kept clean. May I know whether this suggestion has been made by the Corporation of Madras?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நல்ல சிவிக் ரெஸ் பான்சிபிலிடியை உணர்ந்திருக்கிற நாடுகளிலே அந்த நிலைமை இருக்கக்கூடும். இங்கே நாம் வேண்டுமென்று பணம்கொடுத்தாலும் அப்படிச் செய்வார்களா என்பது ஆச்சர்யமாக இருக்கிறது. அப்படிச் செய்யமாட்டார்கள்.

Government Mechanised Brick Plant, Thirumazhisai

* 311 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to place on the table of the House, a copy of the Balance Sheet of tha Government Mechanised Brick Plant for the last three years?

அரசு இயந்திர செங்கல் தொழிற்சாலை, திருமழிசை.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அரசு இயந்திர செங்கல் தொழிற்சாலையின் கடந்த மூன்றாண்டுகளுக்கான ஐந்தொகைக் குறிப்புகளின் படி ஒன்று மேலவை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசு இயந்திர செங்கல் தொழிற் சாலையின் ஐந்தொகைக் குறிப்புகள் மார்ச், 1972 ஆண்டு வரை தயாரிக்கப் பட்டு, மாநில கணக்கு ஆய்வுத் தலைவரின் பரிசீலனையில் உள்ளது.

THIRU G. VASANTHA PAI : Sir, may I ask the Hon. the Minister for Industries how a very efficient plant manufacturing mechanised bricks, like the plant at Thirumazhisai is deprived of persons who are expert business canvassers and who could